அருஞ்சொல் விளக்கம்

NPK உரங்கள் (Fertilizers) – நைட்ரஜன்(N) , பாஸ்பரஸ் (P) மற்றும் பொட்டாசியத்தை (K) உடைய உரங்கள்

Taq (டி.என்.ஏ பாலிமரேஸ்) – தெர்மஸ் அக்வாட்டிகஸ் (Thermos aquaticus) எனும் வெப்பம் விரும்பி பாக்டீரியாவிலிருந்து பெறப்படும் வெப்பம் தாங்கு திறனுடைய டி.என்.ஏ பாலிமரேஸ் நொதி Taq டி.என்.ஏ பாலிமரேஸ் எனப்படும். இது டி.என்.ஏ உருவாக்கத்திற்கு உதவும்.

ஃபைப்ராய்ட்ஸ் (Fibroids) – கருப்பையின் உட்சுவரிலும் வெளிப்பகுதியிலும் காணப்படும் அசாதாரண கட்டிகள் / வளர்ச்சிகள்

அசிடோஜெனிசிஸ் (Acidogenesis) – அசிடோஜெனிக் பாக்டீரியாக்கள் மூலம் எளிய கரிமப்பொருட்களை அசிட்டேட், ஹைட்ரஜன் மற்றும் கார்பன் டைஆக்சைடாக மாற்றுதல்.

அமைப்பு மரபணுக்கள் (Structural gene) – புரத அமைப்பை குறியீடு செய்யும் மரபணுக்கள்

அமைவிடம் (Locus) – ஒரு குறிப்பிட்ட பண்பிற்கான மரபணு, ஒரு குறிப்பிட்ட குரோமோசோமில் அமைந்துள்ள இடம்.

ஆன்டோஜெனி (Ontogeny) – கருவளர்ச்சி ஒரு உயிரினத்தின் கருவளர்ச்சி நிலைகள் ஆன்ட்டோஜெனி எனப்படும்.

இடைப்பால் உயிரிகள் (Intersex) – ஆண், பெண் ஆகிய இருபால் பண்புகளையும் ஒருங்கே பெற்ற உயிரி

இணை ஓங்குத்தன்மை (Co-dominance) – வேறுபட்ட இனச் செல்களைக் கொண்ட உயிரினங்களில் ஓங்கு மற்றும் ஒடுங்கு அல்லீல்கள் இரண்டுமே புறத்தோற்ற பண்புகளை வெளிப்படுத்தும் திறனுடையவை.

இண்டர்ஃபெரான் (Interferon) – இது ஒரு வைரஸ் எதிர்ப்பு புரதமாகும். இவை வைரஸால் பாதிக்கப்பட்ட ஃபைபிரோபிளாஸ்ட் மற்றும் வெள்ளையணுக்களால் உற்பத்திசெய்யப்படுகிறது. மேலும் பாதிப்படையாத செல்களையும் வைரஸ் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் பாதுகாக்கிறது.

இதய இலயமின்மை (cardiac Arrhythmia) – இயல்பான இதயத்துடிப்பிலிருந்து வேறுபட்டு காணப்படுதல்.

இயல்பு திரிபு (Denaturing) : இரு டி.என்.ஏ. இழைகளுக்கிடையிலான ஹைட்ரஜன் பிணைப்புகளை உடைப்பதன் மூலம் தனித்தனி இழைகளாகப் பிரித்தல்.

இயற்கை கொல்லி செல்கள் (NK cells) – இவை புற்றுநோய் மற்றும் நோயால் பாதிக்கப்பட்ட செல்களை அழிக்கின்றன.

இயோஹிப்பஸ் (Eohippus) – நவீன குதிரைகளின் முன்னோடிகள்

இரத்தம் உறையாமை (Haemophilia) : இரத்தம் உறையும் திறனில் ஏற்படும் குறைபாட்டு நிலை. இந்நோய் உள்ளவர்களுக்கு சிறிய காயத்தினால் கூட அதிக இரத்த இழப்பு ஏற்படும்.

உடலுள் கருவுறுதல் (Invivo fertilization) – பெண் உயிரியின் உடலுள் இனச்செல்கள் இணைதல்

உட்வெளிக் கருவுறுதல் (Invitro fertilization) – ஆய்வகத்தில், உடலுக்கும் வெளியே கருவுறச் செய்தல்

உணர்தடை டி.என்.ஏ (Antisense DNA) – இரண்டு இழைகள் உடைய டி.என்.ஏவின் குறியீடு உடைய இழைக்கு நிரப்புக் கூறாக அமையும் குறியீடற்ற இழை உணர்தடை டி.என்.ஏ எனப்படும். உணர்தடை டி.என்.ஏ கடத்து ஆர்.என்.ஏ உருவாக்கத்திற்கான வார்ப்புருவாக அமையும்.

உயிரிய புவியமைப்பு (Biogeography) – உயிரினங்கள் புவியப் பரவலை பற்றிய அறிவியல் ஆகும்.

உயிரின்றி உயிர் தோன்றல் (Abiogenesis) – உயிரற்ற வேதிப்பொருட்களிலிருந்து உயிரினம் தோன்றுவது உயிரின்றி உயிர் தோன்றல் எனப்படும்.

உளவிய மருந்து (Psychoactive drug) – மூளையின் மீது செயல்பட்டு பயன்படுத்துபவரின் மனம் மற்றும் நடத்தையை பாதிக்கும் வேதிப்பொருள்.

ஊசிஸ்ட் (Oocyst) – பிளாஸ்மோடியத்தின் கூடுடைய கருமுட்டை

எம்பைசீமா (Emphysema) – நுரையீரல்கள் அளவில் பெரிதாதல் மற்றும் சரிவர செயல்படாத, தீவிர மருத்துவ நிலையினால் ஏற்படும் சுவாசக் குறைபாடு.

எல்நினோ (El nino) – கிழக்கு வெப்ப மண்டல பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு நீரில் ஏற்படும் இயல்பற்ற வெப்ப அதிகரிப்பு.



XII Std Biology-Zoology Glossary TM.indd 262 27/12/2022 19:33:01